ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 07.11.2017 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.7 - 2017

உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பேரண்டப் பொருளாதாரச் சூழலின் அபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு நாணயச் சபை 2017 நவெம்பர் 06ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டுள்ளது. அதன்படி, இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் அதன் தற்போதைய மட்டங்களிலேயே மாறாமலிருக்கும்.

நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பேணுவதன் மூலமாக நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பாதையொன்றை உத்வேகப்படுத்தும் நோக்குடன் இணைந்து செல்லும் வகையில் நாணயச் சபையின் தீர்மானம் அமைந்துள்ளது. நாணயக் கொள்கை நிலைக்குக் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் பக்கபலமாக அமைந்திருக்கின்றன.

பன்னாட்டு நாணய நிதியத்தின் 2017 ஒத்தோபரின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் தற்போதைய இற்றைப்படுத்தலுக்கிணங்க, உலகளாவிய வர்த்தகம் மற்றும் தயாரிப்புக்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னேற்றமடைந்த வெளிநாட்டு நிலைமைகளுடன் சேர்ந்து கைத்தொழில் மற்றும் பணிகள் துறையின் தொடர்ச்சியான சாதகமான உத்வேகம் மற்றும் வேளாண்மைத் துறையின் மிதமான மீட்சி என்பவற்றின் விளைவுகளின் மூலம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரம் மேம்பட்ட வகையில் செயலாற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. வானிலையுடன் தொடர்புபட்ட தடைகளிலிருந்து தோன்றுகின்ற வழங்கல்பக்க இடையூறுகளினாலும் உயர்வடைந்துவரும் உலகளாவிய பண்ட விலைகளினாலும் பாதிப்படையக் கூடியதாகப் பொருளாதாரம் தொடர்ந்துமிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் நடுத்தர காலத்தில் வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் கிடைக்கும் தன்மை போன்றவை பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொடரும் வானிலையுடன் தொடர்புபட்ட இடர்ப்பாடுகள் உள்நாட்டு உணவு விலைகளினை எதிர்க்கணியமாகப் பாதித்ததுடன் இது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு 2013 = 100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013 = 100) என்பவற்றைப் பயன்படுத்தி அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கத்தின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்ற மையப் பணவீக்கம் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டு பணவீக்கத்தில் ஏற்பட்ட அண்மைய உயர்வு வழங்கலினால் உந்தப்பட்டதென்பதனையும் ஒரு குறுங்காலத்தன்மையைக் கொண்டது என்பதனையும் வலியுறுத்துகின்றது. இதன்படி, 2017 பொருத்தமான நாணய நிலைமைகள் அதேபோன்று பணவீக்கத்தின் மீதான வரித் திருத்தங்களின் ‘‘ஒரே தடவையிலான’’ தாக்கம் மறைந்து போகும் தன்மை என்பனவற்றின் பக்கபலத்துடன் 2017 திசெம்பரிலிருந்து பணவீக்கம் மிதமடையுமெனவும் 2018இல் விரும்பப்பட்ட மட்டங்களை அடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாணயத் துறையில், வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியானது எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று 2017 செத்தெம்பரில் தொடர்ந்தும் மிதமடைந்துள்ளது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் முதிர்ச்சியடைந்தமையின் பெருமளவு காரணமாக அரசிற்கான தேறிய கொடுகடனும் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளது. முக்கிய அரச கூட்டுத்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட மீள்கொடுப்பனவுகளுடன் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனின் வீழ்ச்சியடையும் போக்கானது 2017 யூனிலிருந்து அவதானிக்கப்பட்டவாறு செத்தெம்பரிலும் தொடர்ந்தும் காணப்பட்டது. மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ஆகிய இரண்டினதும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் முன்னேற்றத்தினால் வங்கித்தொழில் முறைமையின் ஒட்டுமொத்த தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2017 செத்தெம்பரில் சாதகமான நிலைமைக்குத் திரும்பியது. விரிந்த பணநிரம்பலின் ($M_{2b}$) விரிவாக்கத்திற்குத் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் கட்டியெழுப்பப்பட்டமையும் பங்களித்துள்ளது. அதேவேளை, உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவிய முன்னேற்றமடைந்த ரூபாய் திரவத்தன்மைக்குப் பதிலிறுத்தும் வகையில் அண்மைய மாதங்களில் சில வங்கி வட்டி வீதங்களும் கீழ் நோக்கி நகர்ந்துள்ளன.

வெளிநாட்டுத் துறையில், குறிப்பாக எரிபொருள், அரிசி மற்றும் தங்கத்தின் மீதான இறக்குமதிச் செலவினத்தின் குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பு ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றத்தின் முன்னேற்றத்தினை விஞ்சியுள்ளது. இதன்படி, ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திரண்ட வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் அதனுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வளர்ச்சியடைந்ததெனினும் முக்கியமாக மத்திய கிழக்கில் நிலவிய புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகளினால் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலேயே காணப்படுகின்றன. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பன வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைத் தொடர்ந்தும் கவருகின்றன. இத்தகைய அபிவிருத்திகளின் மத்தியிலும், மத்திய வங்கியின் உள்நாட்டுச் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் ஒன்றுசேர்ந்த கொள்வனவானது தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியனை விஞ்சியதுடன், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு முன்னேற்றமடைந்துள்ளது. செலாவணி வீதத் தீர்மானத்தில் காணப்படுகின்ற அதிகரித்த நெகிழ்ச்சித்தன்மையானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் காணப்படுகின்ற அழுத்தங்களைக் கணிசமானளவில் தளர்த்தியுள்ளது. இது, ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாயின் ஒன்றுசேர்ந்த தேய்வினை 2016இன் 3.8 சதவீதம் கொண்ட பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடும் போது ஆண்டின் முதல் 10 மாத காலப்பகுதியில் 2.5 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தியுள்ளது.

இத்தகைய பின்னணியில் நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 7.25 சதவீதமாகவும் 8.75 சதவீதமாகவும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றப்படவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2017 திசெம்பர் 28ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்பு:**

.

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | திசெ-16 | மே-17 | யூன்-17 | யூலை-17 | ஓகத்-17 | செத்-17 | ஒத்-17 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 4.5 | 6.0 | 6.1 | 4.8 | 6.0 | 7.1 | 7.8 |
| | தேநுவிசு (2013=100) | 4.2 | 7.1 | 6.3 | 6.3 | 7.9 | 8.6 | - |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 5.8 | 5.2 | 5.1 | 4.9 | 6.0 | 6.0 | 5.8 |
| | தேநுவிசு (2013=100) | 6.7 | 4.7 | 4.1 | 4.2 | 4.8 | 4.6 | - |

*மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| காட்டி | வெளிநின்ற தொகை (ரூ. பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெ 16 | மாச் 17 | யூன் 17 | ஓகத் 17 | செத் 17 | திசெ 16 | மாச் 17 | யூன் 17 | ஓகத் 17 | செத் 17 |
| ஒதுக்குப் பணம் | 856 | 892 | 892 | 911 | 909 | 27.1 | 12.7 | 17.8 | 16.0 | 14.5 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 5,406 | 5,677 | 5,873 | 6,051 | 6,132 | 18.4 | 20.0 | 21.2 | 21.3 | 20.3 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | -231 | -371 | -246 | -50 | 10 | 22.4 | 15.6 | 50.0 | 82.2 | 103.8 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 5,637 | 6,049 | 6,119 | 6,101 | 6,122 | 15.9 | 17.0 | 14.7 | 15.8 | 13.9 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 1,972 | 2,215 | 2,235 | 2,238 | 2,224 | 12.1 | 13.3 | 11.4 | 15.5 | 14.1 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 495 | 553 | 551 | 503 | 498 | -5.3 | 7.5 | 13.7 | 13.9 | 10.0 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 4,204 | 4,375 | 4,505 | 4,609 | 4,659 | 21.9 | 20.4 | 18.6 | 18.0 | 17.5 |
| விரிந்த பணம் ($M_4$) | 6,630 | 6,951 | 7,221 | 7,457 | 7,558 | 15.9 | 18.2 | 20.3 | 20.7 | 19.9 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | திசெ 16 முடிவில் | மாச் 17 முடிவில் | யூன் 17 முடிவில் | ஓகத் 17 முடிவில் | செத் 17 முடிவில் | ஒத் 17 முடிவில் |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.42 | 8.75 | 8.75 | 8.20 | 8.11 | 8.15 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 8.72 | 9.63 | 9.60 | 8.87 | 8.71 | 8.75 |
| 182-நாள் | 9.63 | 10.62 | 10.29 | 9.30 | 9.01 | 9.10 |
| 364-நாள் | 10.17 | 10.98 | 10.47 | 9.67 | 9.10 | 9.48 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.52 | 11.79 | 11.70 | 11.37 | 11.55 | 11.25 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.20 | 13.40 | 13.73 | 13.90 | 13.83 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.37 | 14.54 | 14.90 | 15.12 | 14.75 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.17 | 8.81 | 9.13 | 9.21 | 9.25 | 9.22 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.46 | 11.38 | 11.66 | 11.78 | 11.81 | 11.72 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.17 | 11.49 | 11.57 | 11.04 | 10.63 | - |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*